# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC.98/2026 | Date | : 16.06.2026 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : திரு.சரவணன் | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.06.2026.
(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் தற்போது சங்ககிரி காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.03.2026 ம் தேதி, காலை சுமார் 11.30 மணிக்கு, காவல் உதவி ஆய்வாளர் திரு.அருண்குமார் என்பவருடன், நானும் மற்றும் முதல்நிலை காவலர் திரு.குமார், ஆகியோர்களுடன் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு ரோந்து அலுவலாக, சங்ககிரி காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, ராயலூர் ரோடு மாதா கோவில் சுடுகாடு அருகே கண்காணித்துக்கொண்டு சென்றபோது, அங்கு கையில் ஒரு சாக்கு பையுடன் சந்தேகபடும் படியாக இருந்த ஒரு நபர் போலிசாராகிய எங்களை பார்த்ததும் ஓட முற்பட்டவரை பிடித்து விசாரித்தபோது, பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து அவர் தனது பெயர் முருகன், த/பெ.கந்தன், அம்மாபாளையம், தேவூர், சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம் என்று கூறியவரை, மேலும் விசாரிக்க அவர் அரசு அனுமதியின்றி சுயலாபத்திற்காக கள்ளத்தனமாக அரசு மதுபானத்தை வாங்கி வந்து விற்பனை செய்ய வைத்திருந்த குற்றத்தை

ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி காலை சுமார் 11.45 மணிக்கு கைது செய்தும், அவர் சாக்கு பையில் மறைத்து வைத்திருந்த 180 ML அளவு கொண்ட Diamond Brandy – 16 பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியபோது பொதுஜன சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் உடனிருந்த எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார்.

2) மேற்படி கைப்பற்றுதல் மகசரில் நானும், முதல்நிலை காவலர் திரு.குமார், என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3) பின்னர் கைப்பற்றிய வழக்கு சொத்தை தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவு 32-ன் படி சம்பவ இடத்திலேயே அழித்தல் மகஜர் மூலம் அழிக்கப்பட்டது. மேற்படி அழித்தல் மகசரில் நானும், முதல்நிலை காவலர் திரு.குமார், என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அழித்தல் மகசரிலுள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**அழித்தல் மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4) பின்னர், கைது செய்த எதிரியை பிற்பகல் சுமார் 12.15 மணிக்கு நிலையம் அழைத்து வந்து எதிரியின் மீது சங்ககிரி காவல் நிலைய குற்ற எண்.95/2026, சட்டப்பிரிவு 4(1)(C) of TNP(A) ACT -ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். இது சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரனை செய்தார்.

**<u>குறுக்கு விசாரணை -</u>**

1) சம்பவத்தன்று எனக்கு எத்தனை மணிக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் காலை சுமார் 08.00 மணிக்கு ஆகும். என்னுடன் யார் யார் வந்தது என்றால் காவல் உதவி ஆய்வாளர் திரு.அருண்குமார் மற்றும் நான் மற்றும் முதல் நிலை காவலர் திரு.குமார் ஆகியோர் ரோந்து பணிக்கு சென்றோம். எத்தனை மணிக்கு புறப்பட்டோம் என்றால் காலை சுமார் 11.00 மணிக்கு புறப்பட்டோம். அதற்கு முன்பாக எங்கு சென்றோம் என்றால் பால்மடை, கெமிக்கல் பிரிவுக்கு சென்றோம். சம்பவ இடம் ராயலூர் ரோட்டில் உள்ள மலை அடிவாரம் என்றால் சரிதான்.

2) எதிரி மதுபாட்டில்களை எதில் வைத்திருந்தார் என்றால் சாக்கு பையில் வைத்திருந்தார். மதுபாட்டில்களை எங்கு விற்பனை செய்தார் என்றால் மாதாகோவில் சுடுகாட்டில் வைத்து விற்பனை செய்தார். சாக்கு பை, மதுபாட்டில்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தோமா என்றால் அழித்தர் மகஜர் மூலம் சம்பவ இடத்திலேயே அழித்துவிட்டோம். அழித்த மதுபாட்டில்களின் மதிப்பு என்ன என்றால் ரூ.2000/-ம் இருக்கும். மேற்படி, அழித்த மதுபாட்டில் அரசினால் அனுமதிக்கப்பட்ட மதுபாட்டிலா என்றால் ஆமாம்.

3) யாரின் உத்தரவின் பேரில் மதுபாட்டில்களைஅழித்தோம் என்றால் காவல் உதவி ஆய்வாளர் திரு.அருண்குமார் அ வர்களின் உத்தரவின் பேரில் அழித்தோம். நாங்கள் சம்பவ இடமே செல்லவில்லை என்றும், அவ்வாறு சென்றிருந்தால் மதுபாட்டில்களையும், சாக்கு பையையும் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைத்திருப்போம் என்றும், புள்ளிவிவர கணக்கிற்காக எதிரிமீது பொய் புகார் பதிவு செய்து அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடம் செல்லாததால் தான் நாங்கள் சம்பவ இடச்சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Saravanan

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | :CC No.98/2026 | Date | : .06.2026 |
| Deposition of Witness for | :அ.சா.2 | Taluk | : |
| Name | :திரு.செல்வராசு | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of .06.2026.
(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திரு.அருண்குமார், அவர்கள் பணிமாறுதலில் சென்றுவிட்டதால் அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு பரீட்சையம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 01.03.2026 ம் தேதி, காலை சுமார் 11.30 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் திரு.அருண்குமார், அவர்களுடன், முதல்நிலை காவலர்கள் திரு.குமார் மற்றும் திரு.சரவணன் ஆகியோர்களுடன் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு ரோந்து அலுவலாக, சங்ககிரி காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, ராயலூர் ரோடு மாதா கோவில் சுடுகாடு அருகே கண்காணித்துக்கொண்டு சென்றபோது, அங்கு கையில் ஒரு சாக்கு பையுடன் சந்தேகபடும் படியாக இருந்த ஒரு நபர் போலிசாராகிய எங்களை பார்த்ததும் ஓட முற்பட்டவரை பிடித்து விசாரித்தபோது, பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து

அவர் தனது பெயர் முருகன், த/பெ.கந்தன், அம்மாபாளையம், தேவூர், சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம் என்று கூறியவரை, மேலும் விசாரிக்க அவர் அரசு அனுமதியின்றி சுயலாபத்திற்காக கள்ளத்தனமாக அரசு மதுபானத்தை வாங்கி வந்து விற்பனை செய்ய வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி காலை சுமார் 11.45 மணிக்கு கைது செய்தும், அவர் சாக்கு பையில் மறைத்து வைத்திருந்த 180 ML அளவு கொண்ட Diamond Brandy – 16 பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியபோது பொதுஜன சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் உடனிருந்த முதல்நிலை காவலர்கள் திரு.குமார் மற்றும் திரு.சரவணன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார்.

2) மேற்படி கைப்பற்றுதல் மகசரில் முதல்நிலை காவலர்கள் திரு.குமார் மற்றும் திரு.சரவணன் ஆகியோர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார். (**கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3) பின்னர், கைப்பற்றிய வழக்கு சொத்தை தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவு 32-ன் படி சம்பவ இடத்திலேயே அழித்தல் மகஜர் மூலம் அழிக்கப்பட்டது. மேற்படி அழித்தல் மகசரில் முதல்நிலை காவலர்கள் திரு.குமார் மற்றும் திரு.சரவணன் ஆகியோர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார். (**அழித்தல் மகசர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4) பின்னர் கைது செய்த எதிரியை பிற்பகல் சுமார் 12.15 மணிக்கு நிலையம் அழைத்து வந்து எதிரியின் மீது சங்ககிரி காவல் நிலைய குற்ற எண்.95/2026, சட்டப்பிரிவு 4(1)(C) of TNP(A) ACT-ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். (**முதல்**

**தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). பின்னர், எதிரியின் மீது சட்டப்பிரிவு 4(1)(C) of TNP(A) ACT -ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை கனம் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

__குறுக்கு விசாரணை__ -

1) சம்பவத்தன்று எத்தனை மணிக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் காலை சுமார் 08.00 மணிக்கு ஆகும். யார் யார் சென்றார்கள் என்றால் காவல் உதவி ஆய்வாளர் திரு.அருண்குமார் மற்றும் தலைமை காவலர் திரு.மணிகண்டன் மற்றும் முதல்நிலை காவலர் திரு.குமார் ஆகியோர் ரோந்து பணிக்கு சென்றுள்ளார்கள். எத்தனை மணிக்கு புறப்படப்பட்டது என்றால் காலை சுமார் 11.00 மணிக்கு புறப்பட்டுள்ளார்கள். அதற்கு முன்பாக எங்கு சென்றுள்ளார்கள் என்றால் பால்மடை, கெமிக்கல் பிரிவுக்கு சென்றுள்ளார்கள். சம்பவ இடம் ராயலூர் ரோட்டில் உள்ள மலை அடிவாரம் என்றால் சரிதான்.

2) எதிரி மதுபாட்டில்களை எதில் வைத்திருந்தார் என்றால் சாக்கு பையில் வைத்திருந்துள்ளார். மதுபாட்டில்களை எங்கு விற்பனை செய்துள்ளார் என்றால் மாதாகோவில் சுடுகாட்டில் வைத்து விற்பனை செய்துள்ளார். சாக்கு பை, மதுபாட்டில்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளதா என்றால் அழித்தர் மகஜர் மூலம் சம்பவ இடத்திலேயே அழிக்கப்பட்டுள்ளது. அழித்த மதுபாட்டில்களின் மதிப்பு என்ன என்றால் ரூ.2000/-ம் இருக்கும். மேற்படி, அழித்த மதுபாட்டில் அரசினால் அனுமதிக்கப்பட்ட மதுபாட்டிலா என்றால் ஆமாம்.

3) யாரின் உத்தரவின் பேரில் மதுபாட்டில்களை அழிக்கப்பட்டது என்றால் காவல் உதவி ஆய்வாளர் திரு.அருண்குமார் அவர்களின் உத்தரவின் பேரில்

அழிக்கப்பட்டுள்ளது. சம்பவ இடமே செல்லவில்லை என்றும், அவ்வாறு சென்றிருந்தால் மதுபாட்டில்களையும், சாக்கு பையையும் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைத்திருப்போம் என்றும், புள்ளிவிவர கணக்கிற்காக எதிரிமீது பொய் புகார் பதிவு செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவ இடம் செல்லாததால் தான் சம்பவ இடச்சாட்சிகளை விசாரிக்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Selvarasu